தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590**

**ஆணை நாள்: 10.11.2020**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண்.NC2551/F/2019 (SA3625/F/2019)**

திரு கா. தொண்டைமான் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
இயக்குதலும் பராமரித்தலும்/ அடையாறு,
சென்னை மின் பகிர்மான வட்டம்/ தெற்கு-II,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
CSIR சாலை, தரமணி,
சென்னை - 600 113. ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 29.01.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 28.03.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 16.04.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 20.08.2019 |
| ஆணை பெறப்படாத மனு நாள் | 05.11.2019 |

******

# ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 20.08.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொதுத் தகவல் அலுவலரை 30 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தினால், இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இவ்விசாரணையில் மனுதாரர் திரு கா. தொண்டைமான் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு P.அருணாச்சலம், செயற்பொறியாளர்/ இயக்குதலும் பராமரித்தலும், அடையாறு, சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-II, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தரமணி, சென்னை ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 29.01.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், தெற்கு மின் பகிர்மான வட்டத்தின் மின்பிரிவு அலுவலகங்கள் செய்ய மின் களப்பணிக்கு ஒப்பந்த முறையில் எத்தனை மின் பணியாளர்கள் எந்த ஒப்பந்ததாரர் மூலமாக நியமிக்கப்பட்டுள்ளனரா அல்லது மின் பகிர்மான கழகம் நேரிடையாக நியமித்துள்ளதா என்பது பற்றிய முழுதகவல், ஒப்பந்த பணியாளர்களுக்குரிய சம்பளம் எந்த முறையில் வழங்கப்படுகின்றது என்ற விவரம், சம்பளக்கையேட்டின் நகல், நிலைக்கட்டணம் தொடர்பான தகவல், பணியாளர்கள் இடமாற்றம் தொடர்பான தகவல் போன்ற தகவல்களை 14 இனங்களில் குறிப்பிட்டு வழங்கக் கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், அடையாறு, தரமணி, சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. தான் கோரிய தகவல் இதுநாள்வரை தனக்கு வழங்கப்படவில்லை என தெரிவித்தும், அவற்றை பெற்று வழங்கக் கேட்டும், 28.03.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். 11.04.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கியுள்ளார். திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் முழுமைபெறாத, பொருத்தமில்லாத பதில் மிகவும் தாமதமாக தனக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், உரிய பதில் வழங்கிடவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 16.04.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 05.11.2019 அன்று **SA3625F/2019** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு மேல்முறையீட்டாளர் நேரில் சென்று பார்வையிட்டு கோரியுள்ள தகவல்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அவரது பார்வைக்கு வைக்கவும், மனுதாரர் எழுத்துமூலமாக கேட்கும் தகவல்களை நகலெடுத்து வழங்கவும் உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால், பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 05.11.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. விசாரணையின்போது மேல்முறையீட்டாளர், தான் கோரிய தகவல்களில் இனம் 3, 4, 5, 9, 10, 11 மற்றம் 12 இனங்களுக்கு முழுமையான தகவல் பொதுத் தகவல் அலுவலர் வழங்கவில்லை எனவும், அவற்றை பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு தேவையான நகலை பொதுத் தகவல் அலுவலருக்கு வழங்க உத்தரவிட்டும், மேல்முறையீட்டாளர் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு அவர் குறிப்பிட்ட தேதி மற்றும் நாளில் சென்றும் பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்தில் இல்லாத காரணத்தினாலும், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லை எனவும், இதுபோன்று மற்றொரு தேதியிலும் நிகழ்ந்தது எனவும், எனவே தனக்கு நேரடி விசாரணை மேற்கொண்டு தகவல் வழங்கிடுமாறும் ஆணையத்தைக் கோரினார்.

5. விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பாக மீண்டும் தங்கள் அலுவலகத்திற்கு

நேரில் வந்து பார்வையிட்டு, குறிப்பெடுத்துக் கொள்ளலாம் என ஆணையத்தின் முன் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளருக்கு உரிய, முழுமையான தகவல் வழங்கப்படாமல் மேல்முறையீட்டாளரை வேண்டுமென்றே அலக்களித்து தகவல் வழங்காமலிருப்பது தெரிய வருகிறது. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:

- **மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் ஏறத்தாழ 2 வருட காலமாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலரை தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் ஆணையத்திற்கு பதிவுத் தபால் மூலம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 29.01.2019 தேதியிட்ட மனுவில் கோரிய தகவல் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

மேல்முறையீட்டாளர் நேரடி விசாரணை கோரிய நிலையில், **இவ்வழக்கின் விசாரணை பிறிதொரு தேதிக்கு மாற்றி வைக்கப்படுகிறது. தேதியும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.** அன்றைய தினம் மனுதாரரும், உரிய பொதுத் தகவல் அலுவலரும் தவறாமல் ஆஜராகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.NC2551/F/2019 (SA3625/F/2019)</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
இயக்குதலும் பராமரித்தலும்/ அடையாறு,
சென்னை மின் பகிர்மான வட்டம்/ தெற்கு-II,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
CSIR சாலை, தரமணி, சென்னை - 600 113.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு கா. தொண்டைமான்,
த/பெ. காசிநாதன்,
எண்.10/479, பாபுநகர் மெயின்ரோடு,
மேடவாக்கம்,
சென்னை - 600 100.

**Copy to: Judgement File.**
**Spare/ JE/PA- 19.11.2020**